

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | மார்ச் 02, 2023 | புரட்சி 22 | முழக்கம் 07 | விலை: ரூ.3.00

# சேலம் மாநாடு: கழகம் தயாராகிறது!

*சேலத்தில் ஏப்ரல் 29, 30 தேதிகளில் கழகம் நடத்தவிருக்கும் இரண்டு நாள் மாநாடு தோழர்களிடம் பெரும் உற்சாகத்தை உருவாக்கியுள்ளது. ‘இது தமிழ்நாடு; இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநாடு’ என்ற தலைப்பு தோழர்களை ஈர்த்துள்ளது. சேலத்தில் மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கூடி மாநாட்டுப் பணிகளை ஆலோசித்தது.*



20.02.2023 திங்கள் மாலை 4.00 மணியளவில் கருப்பூர் சக்திவேல் இல்லத்தில் எதிர்வரும் ஏப்ரல் 29, 30 (சனி, ஞாயிறு) ஆகிய இரண்டு நாட்களில் நடைபெறும் திராவிடர் விடுதலைக் கழக மாநில மாநாடு குறித்து ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கலந்துரையாடல் கூட்டத்திற்கு திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார்.

கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்ட தோழர்களும், பொறுப்பாளர்களும் மாநாடு குறித்தும், மாநாட்டிற்கான ஏற்பாடுகள் மற்றும் மாநாட்டினை குறித்து பொதுமக்களிடம் சுவரெழுத்து மற்றும் துண்டறிக்கைகள் வாயிலாக தமிழ்நாடு முழுவதும் கொண்டு செல்ல வேண்டும் என்றும் மாநாட்டிற்காக தனி நபர் நன்கொடை மற்றும் குழுவாக சென்று நன்கொடை வசூல் செய்வது பற்றியும் தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

சேலம் மேற்கு மாவட்டத்திற்கு நங்கவள்ளி அன்பு, இராஜேந்திரன் தலைமையில் குழுவாக 15-க்கும் மேற்பட்ட தோழர்களோடும், அதேபோல் சேலம் கிழக்கு மாவட்டத்திற்கு நங்கவள்ளி கிருஷ்ணன், தங்கதுரை, பிரபாகர் தலைமையில் 15-க்கும் மேற்பட்ட தோழர்கள் குழுவாகச் சென்று பொது மக்களிடமும், வியாபாரிகளிடமும் நன்கொடை வசூல் செய்வதாக குழுக்கள் அமைக்கப்பட்டன.

அதேபோல தனிநபர் நன்கொடை வசூல் குழு அமைக்கப்பட்டு அதில் மாவட்ட, நகர, கிளைக் கழக, ஒன்றிய பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு தனி நபர் நன்கொடை வசூல் செய்வதாகவும் அறிவிக்கப்பட்டது.

கலந்துரையாடல் கூட்டத்தில் பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன், அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, மாநில பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன், தலைமைக் குழு உறுப்பினர் பன்னீர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு மாநில மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கான தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

நிறைவாக கழகத் தலைவர் மாநாடு குறித்தும் மாநாட்டில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்கம், பாட்டரங்கம் குறித்தும், பேரணி எழுச்சியோடு சிறப்பாக நடைபெற வேண்டுமென்றும், மாநாடு நடத்துவதற்கு நிதி முக்கியமென்றும், துண்டறிக்கை மற்றும் சுவரெழுத்துப் பணிகள் மூலம் பொதுமக்களுக்கு மாநாடு குறித்த செய்தியை கொண்டு செல்ல வேண்டும் என்றும் மாநாட்டை நிறைவோடு நடத்தி முடிக்க வேண்டுமென்றும் அதற்கு தோழர்களின் ஒத்துழைப்பு முக்கியம் என்றும் தமது உரையில் எடுத்துச் சொன்னார்.

நிறைவாக டேவிட் நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் இரவு 8.00 மணிக்கு நிறைவடைந்தது.

கலந்துரையாடல் கூட்டத்தில் மாநாட்டிற்காக ஏற்காடு பகுதியின் சார்பாக அறிவிக்கப்பட்ட ரூ.50,000/- மற்றும் சிந்தாமணியூர் கிளைக் கழகத்தின் சார்பாக அறிவிக்கப்பட்ட ரூ.1,00,000/-இல் முதல் தவணையாக ரூ.55,000/-ம், கொளத்தூர் பகுதியின் சார்பாக அறிவிக்கப்பட்ட ரூ.50,000த்தில் முதல் தவணையாக ரூ.20,000/- மாநாட்டு பொறுப்பாளரிடம் வழங்கப்பட்டது.

கலந்துரையாடல் கூட்டத்தில் 50-க்கும் மேற்பட்டத் தோழர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் இரவு உணவு வழங்கப் பட்டது.

## சென்னை மாவட்டக் கழகத்துக்கு திருவல்லிக்கேணி பகுதி தோழர்கள் ‘ஸ்கார்பியோ’ கார் பரிசளிப்பு



சென்னை மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி கழகத் தோழர்கள் மாவட்டக் கழகப் பயன்பாட்டுக்கு ஸ்கார்பியோ கார் ஒன்றை வாங்கி (2009ஆம் ஆண்டு மாடல்) கழகத்துக்கு அளித்துள்ளனர்.

சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதியிடம் அவரது பிறந்த நாளான பிப்.17 அன்று இராயப்பேட்டை பெரியார் படிப்பகத்தில் தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன், உமாபதியிடம் வழங்கினார். கழகப் பணிகளுக்கு இந்த கார் பயன்படும்.

தனது பிறந்த நாளையொட்டி தோழர்கள் வழங்கிய ரூ.2500/- நன்கொடையை கழக ஏட்டுக்கு பொதுச் செயலாளரிடம் வழங்கினார் இரா. உமாபதி.

## கழக ஏட்டுக்கு புதிய கணினியை நன்கொடையாக வழங்கினார் பெரியாரிஸ்ட் அசோக்குமார்

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழுக்காக தொழில் முனைவரும் பெரியாரியலாளருமான கோவை அசோக்குமார், புதிய மடிகணினி (லேப் டாப்) கருவியை வழங்கியுள்ளார்.

கழக சார்பில் தோழருக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”

ஆண்டுக்கட்டணம்

**ரூ.300**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 8973341377

தலையங்கம்

## மனு சாஸ்திரத்துக்கு சியாட்டில் தந்த மரண அடி

*இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு சென்ற இந்து சனாதனவாதிகள் தங்களின் ஜாதியையும் உடன் சுமந்து போய் ஜாதியமைப்பே இல்லாத நாட்டில் ஜாதியத்தையும் அதன் பாகுபாடுகளையும் திணித்து விட்டார்கள். தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, மேலை நாட்டுக் கலாச்சாரம் - நமது சனாதன கலாசாரத்தை சீரழித்து விட்டது என்கிறார். உண்மையில் சனாதன கலாச்சாரம் தான் மேலை நாடுகளின் சமத்துவப் பண்பாட்டை சீர்குலைத்து வருகிறது. அதன் எதிரொலிதான் அமெரிக்காவின் வாஷிங்டன் மாகாணத்திலுள்ள சியாட்டில் நகராட்சி ஜாதிப் பாகுபாடுகளைத் தடை செய்து தீர்மானம் நிறைவேற்றியதாகும்.*

*அமெரிக்காவுக்குக் குடியேறிய அந்நாட்டு குடிமக்களாகிய தெற்கு ஆசியர்களிடையே 'இந்து சனாதனம்' திணித்த ஜாதியப் பாகுபாடுகளால் பணியிடங்களிலும் குடியேறிய மக்களிடமும் பாகுபாடுகளைக் கொண்ட 'மனுவாதம்' தலைவிரித்தாடத் தொடங்கியது. நவீன தொழில்நுட்பங்களுடன் இயங்கும் தொழில் நிறுவனங்களிலும் அமெரிக்காவின் மிகப் பெரிய தொழில் நுட்பப் பூங்கா இயங்கும் சிலிகான் பள்ளத்தாக்கிலும் பணியிடங்களில் பாகுபாடுகள் காட்டப்படுகின்றன.*

*இந்தப் பூங்காவில் மிகப் பெரிய தொழிலதிபராகக் கருதப்படும் சிஸ்கோ என்பவர், தொழிலாளர்கள் மீது ஜாதிப் பாகுபாடு காட்டுகிறார் என்று அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது. இதற்கு எதிராக ஜாதி எதிர்ப்பு அமைப்புகளும் தலித் அமைப்புகளும் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றன.*

*சியாட்டில் நகராட்சி உறுப்பினரும் ஜாதிய பாகுபாடுகளை எதிர்த்துப் போராடி வருபவருமான ஷாமா சவந்த்* (Kshama Sawant) *கடந்த பிப். 21, 2023 அன்று ஜாதிப் பாகுபாடுகளைத் தடை செய்யும் தீர்மானத்தை நகர சபையில் கொண்டு வந்து மாபெரும் புரட்சியை நடத்தியிருக்கிறார். 6 உறுப்பினர்கள் ஆதரவாகவும் ஒரு உறுப்பினர் எதிர்த்தும் வாக்களித்துள்ளனர். இனம், பால் (பெண்-ஆண்), மதம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டக் கூடாது என்று ஏற்கனவே அமெரிக்காவில் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தில் ஜாதியையும் இணைத்து அவசரப் பிரகடனம் ஒன்றை சியாட்டில் நகராட்சி வெளியிட்டிருக்கிறது. ஏற்கனவே ஹார்வார்ட், பிரவுன், கலிபோர்னியா பல்கலைக்கழகங்கள் இதேபோன்று பல்கலைச் சட்டங்களைத் திருத்தி அமைத்துள்ளதையும் குறிப்பிட வேண்டும். இந்து சனாதன கலாச்சாரம் இதற்கு மாறாக இந்தியப் பல்கலைக் கழகங்களில் 'அகில இந்திய வித்தியார்த்தி பரிஷத்' என்ற இந்து மாணவர்கள் அமைப்புகளைத் தான் உருவாக்கி வைத்துள்ளது.*

*சியாட்டில் தீர்மானம் ஜாதியை மிகச் சரியாக வரையறை செய்திருப்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். "கெட்டுதட்டி இறுகிப் போய் கிடக்கும் சமூக முடக்கத்திற்குக் காரணம் ஜாதி ஆகும். பாரம்பர்யம், அகமணம், பழக்க வழக்கம், மதங்களால் உருவாக்கப்பட்ட சமூகத் தடைகளைக் கொண்டதே ஜாதியமைப்பு" என்று தீர்மானம் குறிப்பிடுகிறது.* (Rigid, social stratification Characterised by hereditary status, endogamy and social barriers sanctioned by custom, law or religion) *'தலித் சமத்துவ ஆய்வகம்' என்ற அமைப்பை 2016ஆம் ஆண்டிலிருந்து நடத்தி வரும் அதன் இயக்குனர் தேன்மொழி சவுந்தரராசன், தங்களின் தொடர் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி என்று குறிப்பிட்டுள்ளார்.*

*"அமெரிக்காவில் நான்கில் ஒரு தலித், வாய்மொழியாகவோ உடல்ரீதியாகவோ பணியிடங்களில் பாகுபாடுகளுக்கு உள்ளாகிறார். வழிபாட்டு இடங்கள், சமூக சந்திப்புகளில் பாகுபாடுகள் காட்டப்படுவதோடு, மைக்ரோ சாப்ட், அமேசான், போயிங் விமான நிறுவனங்களில் தலித்துகள் பாகுபாடுகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்" என்றார். ஆந்திராவைச் சார்ந்த அமெரிக்க தொழிலதிபர் (லேக்கி ரெடி பாக்கி ரெட்டி) கலிபோர்னியா - பொக்கிலி நகரத்தில் ஆந்திராவிலிருந்து முறைகேடாக அழைத்து வரப்பட்ட தலித் மக்கள் மற்றும் மைனர் பெண் குழந்தைகள் மீது பாகுபாடு காட்டிய குற்றத்துக்காக தனது மகனோடு சிறையில் முதன்முதலாக அடைக்கப்பட்டதையும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.*

*ஆனால் அமெரிக்காவில் செயல்படும் பார்ப்பன உயர்ஜாதியினரைக் கொண்ட 'இந்து அமெரிக்கர்கள் சம்மேளனம்' இத் தீர்மானத்தை எதிர்க்கிறது.*

*ஜாதிப் பாகுபாடுகள் கூடாது என்பது நியாயம் தான் என்றாலும் ஜாதி தெற்கு ஆசியர்களின் அடையாளமாக இருப்பதால் அவர்களை தனிமைப்படுத்துகிறது இந்தச் சட்டம் என்று கூறி, ஜாதிப் பாகுபாடுகளுக்கு உரம் சேர்க்கவே விரும்புகிறது.*

*"நாங்களும் தீண்டாமையை எதிர்க்கிறோம். ஆனால் காலம்காலமாக பின்பற்றப்படும் ஆகமங்கள் கூறும் தீண்டாமை மதம் சார்ந்தது; அதை மாற்ற முடியாது" என்று இங்குள்ள பார்ப்பனர்கள் பேசுவதையே எதிரொலிக்கிறார்கள்.*

*சியாட்டில் தீர்மானம் மனுசாஸ்திரத்திற்கு மரண அடி தந்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். 'சியாட்டிலாக' ஒவ்வொரு நகரமும் கிராமமும் மாற வேண்டும். அதற்குத் தடைப் போடும் சனாதன சக்திகளுக்கு எதிரான உறுதியான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.*

# பெரியார் வெற்றி பெறுகிறார்!

ராய்ப்பூரில் கூடிய காங்கிரஸ் கட்சி மாநாடு தன்னுடைய கட்சி விதிகளில் பல முக்கிய திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. பெரியார் காங்கிரஸ் கட்சியில் இருந்து ஏன் வெளியேறினார், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்று அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கிய சமூக நீதிக் கொள்கையை காங்கிரஸ் கட்சி ஏற்க வேண்டும் என்று மாநாடுகளில் தீர்மானம் கொண்டு வந்து காங்கிரஸ் கட்சியின் பார்ப்பன தலைவர்கள் அந்த தீர்மானத்தை தோற்கடித்ததன் காரணமாக பெரியார் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகினார்.

காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிய பெரியார் கட்சியில் இருந்தபோது கதர் மூட்டைகளை தூக்கி கொண்டு ஊர் ஊராக விற்பனை செய்தவர் தான், கள்ளுண்ணாமை என்ற கொள்கையை ஆதரித்து தன் தோட்டத்திலிருந்த தென்னை மரங்களை எல்லாம் வெட்டி வீழ்த்தியவர் தான் பெரியார், கள்ளுக்கடை மறியல் போராட்டத்தை ஈரோட்டில் இந்தியாவே வியக்கும் அளவுக்கு நடத்தி முடித்தவர் தான் பெரியார், ஆனால் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகியதற்குப் பிறகு அதன் காந்தியக் கொள்கைகளை மறுபரிசீலனைக்கு உட்படுத்தினார். கதர் என்ற கொள்கை அறிவியலுக்கு எதிரான கொள்கை என்றும் மதுவிலக்கு கொள்கை என்பது காலத்தால் பின்பற்ற முடியாத அறிவியலுக்கு எதிரானது என்றும் இது சமூக மாற்றத்திற்குப் பயன்படாது என்றும் கடுமையாக எதிர்த்தார். மதுவிலக்கு, கதர், ஆதாரக் கல்வித் திட்டங்களை எதிர்த்தார்.

இப்போது ராய்ப்பூரில் கூடிய காங்கிரஸ் கட்சி மாநாடு தனது கட்சி விதிகளில் முக்கியத் திருத்தங்களை நிறைவேற்றியுள்ளது, காங்கிரஸ் கட்சியில் ஒருவர் உறுப்பினராக இருக்க வேண்டும் என்றால் அவர் மது அருந்தக்கூடாது என்ற விதி இருந்தது. அந்த விதி இப்போது காலத்திற்கு பொருந்தாது என்று கூறி நீக்கியுள்ளது. அதேபோல் கதர் அணிவது கட்டாயம் என்ற காங்கிரஸ் கட்சியின் விதியும் கைவிடப்பட்டு விருப்பமுள்ளவர்கள் அணியலாம் என்ற திருத்தத்தையும் கொண்டு வந்துள்ளது.

மூன்றாவதாக காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களில் 50 சதவீத இடங்களை பட்டியல் இனத்தவர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், பழங்குடியினருக்கு ஒதுக்க வேண்டும் என்ற திருத்தத்தையும் காங்கிரஸ் கட்சி கொண்டு வந்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ரன்தீப் சிங் சர்ஜிவாலா இந்தத் திருத்தத்தை கொண்டு வந்து கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறிய பெரியார் எந்தக் கொள்கைகளுக்காக அன்றைக்கு காங்கிரஸ் கட்சியை எதிர்த்து குரல் கொடுத்தாரோ அதே பெரியார் கொள்கையை ஏற்றுக் கொண்டு கட்சியிலே சில திருத்தங்களை கொண்டு வந்திருப்பது தான் வரலாற்றுத் திருப்பம். பெரியார் வெற்றி பெறுகிறார்.

## மதுரையில் மணிமேகலை - மா.பா.மணி அமுதன் சுயமரியாதை இணையேற்பு விழா



திராவிடர் விடுதலைக் கழகத்தின் மதுரை மாவட்டச் செயலாளர் மா.பா மணியமுதன் - மணிமேகலை ஆகியோரின் சுயமரியாதை இணையேற்பு விழா 26.02.23 ஞாயிறு அன்று மதுரை மேலூர் ரஹ்மா திருமண மண்டபத்தில் காலை 10.30 மணியளவில் துவங்கி நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்தார். இணையேற்பு விழாவிற்கு ஆதித் தமிழர் பேரவையின் தலைவர் இரா.அதியமான் முன்னிலை வகித்தார். விழாவின் துவக்க நிகழ்வாக வானவில் இன உணர்வுப் பாடலைப் பாடினர்.

மணமக்களை வாழ்த்தி அண்ணா திராவிட மக்கள் முன்னேற்ற கழகத் தலைவர் பசும்பொன் பாண்டியன், தமிழ் தேச மக்கள் முன்னணியின் தலைவர் மீ.த.பாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச் செயலாளர்கள் வன்னி அரசு, கனியமுதன், தமிழ்மண் தன்னுரிமை இயக்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் த. ஜெயராமன், கழகத்தின் பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், கழகப் பொருளாளர் துரைசாமி ஆகியோர் பேசினர்.

தோழர்களின் வாழ்த்துரைகளுக்கு பின்பு கழகத் தலைவர் இணையேற்பு உறுதி மொழியை கூற தொடர்ந்து இணையர்கள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். இணையேற்பின் அடையாளமாக இணையர்கள் கரங்களைக் குலுக்கி, மாலைகளை மாற்றிக் கொண்டனர்.

நிகழ்வில் ராஜீவ் வழக்கில் விடுதலையான ரவிச்சந்திரன் மற்றும் தமுமுக, இந்திய முஸ்லீம் லீக், SDPI, வண்ணார் பேரவை, தமிழ்நாடு மருத்துவர் சங்கம், புரட்சிகர இளைஞர் முன்னணி, சிபிஐ, சிபிஎம், ஐக்கிய முஸ்லீம் முன்னேற்ற கழகம் , மே 17 இயக்கம் ஆகிய அமைப்புகளின் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். இந்த இணை ஏற்பு விழாவில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து கழகப் பொறுப்பாளர்கள், தோழர்கள், நண்பர்கள் மணமக்களின் உறவினர்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியை திராவிடர் விடுதலைக் கழகத்தில் மதுரை மாவட்ட கழகக் காப்பாளர் தளபதி ஒருங்கிணைப்பு செய்தார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி, மேலூர் பொறுப்பாளர் சத்ய மூர்த்தி ஆகியோர் மேற் கொண்டனர். நிறைவாக மணமகன் மா. பா.மணி அமுதன் நன்றியுரையாற்றினார்.

ஜாதி இறுக்கம் நிறைந்த மதுரை மேலூர் பகுதியில் அறிவிக்கப்பட்ட முதல் ஜாதி மறுப்பு சுயமரியாதைத் திருமணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவை கருத்தரங்கில் கொளத்தூர் மணி பேச்சு

# இலண்டனில் இறைச்சி சாப்பிட்ட வ.வே.சு. அய்யர் தான் சேரன்மாதேவி குருகுலத்தில் வர்ணத் தீண்டாமையை அமுல்படுத்தினார்

***பிப்ரவரி 18, 2023 அன்று கோவை மாநகரக் கழகம் நடத்திய “1929 செங்கல்பட்டு முதல் சுயமரியாதை இயக்க மாநாடும், தமிழ் நாட்டு அரசியலும் கருத்தரங்க”த்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.***

சுயமரியாதை இயக்கம் 1929ஆம் ஆண்டு பிப்ரவரி 17, 18 ஆகிய தேதிகளில் நடந்தேறிய மாநாடு, முதல்நாள் மாநாடு என்பது பெரிய ஊர்வலம் வந்து சேர்வதற்கு நீண்ட நேரமானது. தலைமையுரை வரவேற்புரையுடன் முதல்நாள் நிகழ்வு நிறைவு பெற்றது.

அடுத்தநாள் காலை 10 மணிக்குத் தொடங்கி 3 மணிவரை தீர்மானத்தை பற்றி விவாதித்து நிறைவேற்றுவது என்ற முறையின் படி தீர்மானங்கள் நிறைவேறியது. அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளைத் தேர்ந்தெடுத்து அந்த நாளில் இப்படிப்பட்ட கருத்தரங்கத்தை நடத்த வேண்டும் என்ற தோழர்களின் முயற்சிக்கு முதலில் எனது நெஞ்சார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய தோழர் இராஜிவ் காந்தி சொன்னதை போல வரலாற்றை நாம் மீண்டும் மீண்டும் நினைவூட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். நமக்கென்று ஒரு அழுத்தமான அரசியல் வரலாறு இருக்கிறது. கொள்கை வரலாறு இருக்கிறது. போராட்ட வரலாறு இருக்கிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சியை மாற்றியமைப்பதற்கான தொடக்கப் புள்ளியாக இருந்தது சுயமரியாதை இயக்கம்.

அது முன்னெடுத்துச் சென்ற வீச்சான நடவடிக்கைகளை பலரும் பாராட்டியிருக்கிறார்கள், பேசியிருக்கிறார்கள். சம்பந்தமில்லாமல் யாரோ ஒரு வெளிநாட்டுக்காரர் அமர்த்தியா சென் என்ற வங்கத்து பொருளாதார அறிஞர் நோபல் பரிசு பெற்றவர். ஜீன் டிரெஸ் தமிழ்நாடு திட்டக் குழுவின் அறிவுரையாளராக இருக்கிறார். இருவரும் சேர்ந்து ஒரு நூலை எழுதினார்கள். “Uncertain Glory” என்ற தலைப்பிலே அந்த நூலை எழுதினார்கள். அதில் தமிழ்நாட்டின் சிறப்புகளைப் பற்றி ஒப்பீட்டளவில் இந்தியாவில் இருக்கிற நாடுகளோடு அரசியல் முறையில் மாநிலங்களோடு ஒப்பிடுகிற போது இது எவ்வளவு முன்னேற்றமாக இருக்கிறது என்பதைச் சொல்லி தமிழ்நாடு கேரளா இமாச்சலப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களைப் பற்றியும் பாராட்டுகிறார்கள், கடைசியாக சொல்கிறார் தமிழ்நாடு மட்டும் இந்தியாவோடு இணைந்திருக்காமல் இருந்திருந்தால் அய்ரோப்பிய நாடுகளுக்கு இணையாக வளர்ந்திருக்கும் என்று முடிக்கிறார்கள்.

அவர் நோபல் பரிசு பெற்ற அறிஞர். அதற்குப் பிறகு எழுதுகிறார். இந்தச் சாதனையின் தொடக்கப் புள்ளியாக இருந்தது பெரியாரின் சுயமரியாதை இயக்கம் என்று எழுதுகிறார். அண்மையில் கூட நாராயணன் என்ற ஒரு பார்ப்பனர். அவர் தமிழ்நாட்டில் அய்.ஏ.எஸ் அதிகாரியாக நிதிச் செயலாளராக இருந்தார். வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் ஆலோசகராக இருந்தார். இப்போது சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில் இருக்கிறார். அவர் Dravidian years என்ற ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார். திராவிட ஆட்சியில் தமிழ்நாடு எப்படி வளர்ந்திருக்கிறது என்பதைப் பற்றி எழுதியிருக்கிறார். அந்த நூலிலும் அவர் அதைத்தான் சொல்கிறார் அது திமுக வெற்றிப்பெற்றப் பின் எழுதிய நூல் அல்ல, அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அந்த நூல் வெளி



வந்து விட்டது, அதில் எப்படி இந்த நாட்டில் புத்துணர்ச்சி ஏற்பட்டது. அண்ணா அவர்களின் குறுகிய கால ஆட்சி முடிந்தபின் எழுதுகிறார். அவர் எழுதுகிறார் “அப்போது ஆட்சியில் இருந்தவர்களெல்லாம் திராவிடக் கொள்கைக்கு எதிரானவர்கள் தான் அதை நிறைவேற்றுகிற நிர்வாகப் பொறுப்பில் அமர்ந்திருந்த காலம்” என்று எழுதுகிறார்.

அதனால் தான் பெரிய வெற்றிகளை அண்ணா காலத்தில் நாம் பெறவில்லை. அடுத்த வந்த கலைஞர் அரசு நிர்வாகத்தின் கட்டமைப்பை மாற்றியமைக்கிறார். மக்களுடைய பிரதிநிதிகளை உட்கார வைத்துவிட்டு சிறுபான்மை பிரதிநிதிகளை கீழே கொண்டு வருகிறார். அவர்கள் தான் தடையாக இருப்பார்கள். அதைப்பற்றி எழுதுகிறார் இந்த நாட்டில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் உலகம் முழுவதும் அதைப்பற்றி பேசினார்கள். அதை நடைமுறைப்படுத்தினார்கள். இந்திய அரசு

> - *செங்கல்பட்டு மாநாட்டுக்கு உலக பகுத்தறிவாளர்கள் அமைப்புகளை எடுத்துக்காட்டி மூடநம்பிக்கைகளை ஒழிக்க பெண்களுடன் வரவேண்டும் என்று அழைப்பு விடுத்தார் பெரியார்.*
> - *திருமணத்துக்கு தாலி என்ற திட்டத்துக்கு மாற்றாக கல்லூரி படிக்க வரும் பெண்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் தமிழக முதல்வரின் திட்டம் செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டுக் கோரிக்கையின் விரிவாக்கம் தான்.*

அந்த ஆய்வறிக்கையை ஆய்வு செய்து வெளியிட்டார்கள். தமிழ்நாட்டில் இவ்வளவு பெரிய வெற்றிபெற்றதற்கு காரணம் சுயமரியாதை இயக்கம் தொடக்க காலத்தில் இருந்தே இதைப்பற்றி பேசியது. அது குடும்ப நலன் என்ற பொருளில் பேசவில்லை, பெண் விடுதலை என்ற பொருளில் பேசியிருந்தாலும் அதுதான் எளிதில் தமிழ் மக்களை ஏற்கச் செய்தது என்று எழுதியிருக்கிறார்கள்.

யாரோ எங்கே இருக்கிற ஆய்வாளர்கள், நம்முடன் ஒத்த கருத்தில்லாத அரசியல் அமைப்பின் கீழ் பணியாற்றுகிற அதிகாரிகள் அல்லது துறை, இவ்வளவு பேரும் சொல்லுகிற சுயமரியாதை இயக்கம் போதிய அளவு மக்களிடம் போய் சேர்ந்திருக்கிறதா? அதைப்பற்றிய புரிதல் இந்த மக்களுக்கு உண்டா? ஏற்படுத்தியிருக்கிறோமா? என்றால் மிகக் குறைவாகத் தான் ஏற்படுத்தியிருக்கிறோம். அரிதாக கிடைக்கிற சில நூல்களின் வழியாக எங்கேனும் நடக்கிற கூட்டங்களில் பேசப்படுகிற செய்திகளின் வழியாக ஓரளவு தெரிந்திருக்கிறோம். தேடிச் சென்று படிக்கும் ஆவல் நம்மில் எத்தனை பேருக்கு இருக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால் இப்படிப் பட்ட குறிப்பின் மீது வைக்கிற போதுதான் அதுகுறித்து நாம் மேலும் மேலும் சிந்திக்க வேண்டியவர்களாக பேச வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இதன் தலைப்பு சுயமரியாதை மாநாடு மட்டுமல்ல. தமிழ்நாட்டு அரசியலும் என்று இணைத்து தான் சொல்கிறார்கள். தமிழ் நாட்டு அரசியலில் பேசப்படுகிற செய்திகளாக இருக்கிற செய்திகளைப் பார்த்தால் தெரியும், அதிகமாக இட ஒதுக்கீட்டைப் பற்றி உரையாடிக் கொண்டு இருக்கிறோம். வரலாற்றுக் காலத்தில் இருந்து வஞ்சிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு கொள்கை முடிவெடுக்கிற இடத்திலோ அல்லது நிறைவேற்றுகிற இடத்திலோ அது சரியா தவறா என்று பரிசீலிக்கிற நீதித்துறையிலோ வரலாற்றுக் காலத்தில் வஞ்சிக்கப்பட்ட மக்கள் அமர்ந்தால் தானே உண்மையான நீதியை மீட்டெடுக்க முடியும். அந்த நோக்கத்திற்காகத் தான் வகுப்புவாரி உரிமை என்று பேசப்பட்டது, இப்போது இட ஒதுக்கீடு. சதவீதம் எல்லாம் பேசவில்லை, பெரியார் காலம் பேசியது. அந்தந்த சமுதாய மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்கு இடங்களை ஒதுக்கி கொடுங்கள். இதைத்தான் பெரியார் கேட்டார். பார்ப்பனர்களுக்கும் மூன்று சதவீதம் கொடுங்கள் என்று கேட்டார். இன்னும் சொல்லப்போனால் பெரியார் பொறியியல் கல்லூரியில் 3 சதவீத இடங்கள் பார்ப்பன மாணவிகளுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது, இன்றைக்கு வரைக்கும் வழங்கப்பட்டு வருகிறது. வகுப்புவாரி உரிமை பின்பற்றிக் கொண்டு தான் இருக்கிறார்கள். அப்போது அந்த முறை முக்கியமாக பேசப்பட்டு வந்தது.

அடுத்தது பெண்ணுரிமையைப் பற்றி சொத்துரிமைக்கான சட்டங்களை எல்லாம் பார்க்கிறோம். இப்போது ஒரு காலத்தில் பெண் என்றாலே அவள் நினைத்துப் பார்ப்பது திருமணம், பெற்றோர்கள் திருமணம் வரைக்கும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்காகத் தான் தாலி கொடுத்தால் பெரிய செய்தி. தாலிக்கு பவுன் கொடுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அது அல்ல செய்தி பெரியார் சொல்கிறார் “பெண்களை விரும்புகிற வரை படிக்க வையுங்கள்” என்று சொல்கிறார். தாலிக்குப் பவுன் கொடுப்பதற்கு பதிலாக அவர்களது கல்விக்கு உதவித் தொகை மாதம் ஆயிரம் ரூபாய் கொடுங்கள் என்ற ஒரு பெரியத் திட்டம். இப்போது தமிழக முதல்வர் அமுல்படுத்தி வருகிறார். இது நமக்கு எளிதாக தெரியலாம். ஆனால் பத்தாண்டுகளுக்கு பின்னால் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை நம்மால் எண்ணிப்பார்க்க கூட நமக்கு மலைப்பாக இருக்கும். அவ்வளவுத் தாக்கத்தை ஏற்படுத்திய திட்டங்களைப் பற்றி பேசிக் கொண்டு இருக்கிறோம்.

அடுத்தது இந்தி, சமஸ்கிருதம் பற்றி பேசப் படுகிறது. இப்போதும் பேசிக் கொண்டு தான் இருக்கிறோம். இருமொழிக் கொள்கையை பேசிக் கொண்டு இருக்கிறோம். சுயமரியாதை திருமணத்தைப் பற்றி பேசுகிறோம். இப்போது பேசப்படுகிற செய்திகள் ஜாதிய ஏற்றத் தாழ்வுகள், அதனால் நடக்கிற கொடுமைகள் இப்படிப் பேசப்படுகிற செய்திகளை எல்லாம் அலசி ஆராய்ந்து அதற்கான தீர்வைக் கண்ட மாநாடு தான் செங்கல்பட்டு மாநாடு, தீர்வைக் கொடுத்தது. அதுதான் முதல் மாநாடு என்று இல்லை, பல மாநாடுகள் நடந்திருக் கின்றன. அப்போது அது மாகாண மாநாடாகத் தான் நடத்தினார்கள். திருநெல்வேலி, மதுரையில் மாநாடு நடந்திருக்கிறது. ஆனால் செங்கல்பட்டு மாநாட்டில் முக்கியமான செய்தி உண்டு. கலந்து கொண்டோர் எல்லாம் யார்? அதைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால் பெரியாரின் பார்வை எப்படி இருந்தது என்பதற்காக சொல்லுகிறோம். சமுதாயத்தில் யார் யாரெல்லாம் நாம் ஒதுக்கி வைத்தோமோ அந்த மக்களுக்கு எல்லாம்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# திருப்பூர் மாநாட்டில் தலித் கோயில் நுழைவை எதிர்த்த வைத்தியநாத அய்யர்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னுரிமை கொடுத்தார் என்பதற்கு அந்த மாநாடு முன்னுதாரணம்.

மாநாட்டுக்கு அழைக்கிறார். யார் யாரெல்லாம் கலந்து கொள்ளலாம் என்று அழைப்பைப் படித்தாலே நமக்குத் தெரியும். இலண்டனில் Rationalist Press Association என்று ஒரு அமைப்பு உள்ளது, அமெரிக்காவில் Free Thinkers Association என்ற அமைப்பு. பெரியார் எழுதுகிறார் இரஷ்யாவில் Anti God's Society இருக்கிறது, சீனாவில் Young Chinese என்ற அமைப்பு இருக்கிறது, ஆப்கானிஸ்தான், துருக்கி முதலிய அநேக இடங்களில் சர்க்காரால் குருட்டு நம்பிக்கைகளையும், மூடப் பழக்க வழக்கங்களையும் ஒழிக்கும் வேலை நடக்கிறது, அதுமாதிரி நாமும் இங்கு ஒன்று செய்தாக வேண்டும், அழுத்தமாக செய்தாக வேண்டும். அதற்குத்தான் அடுத்த பிப்ரவரி மாதத்தில் இரண்டாம் வாரத்தில் மூன்றாம் வாரத்தில் மாநாடு நடத்தவிருக்கிறோம் என்று சொல்லி அந்த மாநாட்டிற்கு வர வேண்டும் என்று சொல்கிறார். எப்படி வர வேண்டும் என்பதையும் சொல்கிறார். ஒவ்வொருவரும் தங்களது மனைவி மக்களுடன் வரவேண்டியது மிகவும் அவசியமானது என்று மிகவும் அழுத்தமாக தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் மட்டும் வந்தால் போதாது, மூடநம்பிக்கையை ஜாதியை கட்டிக் காப்பதற்கு பயன்படுத்துவதே பெண்களைத் தான். அதிகமாக பயன்படுத்தப்படுகிறார்கள் என்கிறார். அதனால் அவர்களை முதலில் அழைத்து வாருங்கள் என்று அது மிக அவசியம், அதோடு அவர் நிற்கவில்லை தனிப்பட்ட ஸ்திரீகளும் தங்களை விதவைகள் என்றோ வேசிகள் என்றோ நினைத்துக் கொண்டிருப்பவர்களும் அவசியம் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று சொல்கிறார். அப்புறம் சொல்கிறார், ஆதலால் செங்கல்பட்டு மாநாட்டிற்கு முக்கியமாக வாலிபர்களும் பெண்களும் தாழ்த்தப்பட்டவர்களும் அவசியம் வர வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறேன்.

இது யாருக்காக நடத்தப்படுகிற மாநாடு என்று கருதுகிறார்கள் என்றால் உரிமைப் பறிக்கப்பட்டு கிடக்கிற பெண்கள், சமூகத்தில் கடைநிலைக்கும் கடைநிலையில் ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கிற தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள், இதை மாற்றுவதற்கு தன்னலமில்லாமல் போராடக் கூடிய இளைஞர்கள் இவர்கள் கட்டாயம் வாருங்கள். உங்களால் தான் ஏதேனும் மாற்றத்தை கொண்டு வர முடியும் என்று அழைப்பில் சொல்கிறார். இதற்கு முன்னால் சில மாநாடுகளை பெரியார் நடத்தி இருக்கிறார். அவர் காங்கிரஸ்காரராக இருந்த போது வைக்கம் போராட்டம், சேரன் மாதேவி குருகுலப் போராட்டம் நடத்துகிறார்.

அண்ணா 'ஆரிய மாயை' நூலில் பார்ப்பனர் பற்றி "பேராசை பெருந்தகையே போற்றி! பேச நா இரண்டுடையாய் போற்றி! வஞ்சக வேந்தே போற்றி! வண்கன நாதா போற்றி!" என்று எழுதுவார். பேச நா இரண்டுடையாய் போற்றி என்றும் எழுதுகிறார். இங்கொன்று பேசுவார்கள். அங்கொன்று செய்வார்கள், இதை ஆங்கிலத்தில் Double tounge என்று சொல்வார்கள். வ.வே.சு. அய்யர் காங்கிரஸ் கட்சிப் பணத்தில் நடத்திய குருகுலத்தில் பார்ப்பனர் குழந்தைகளுக்கும் பார்ப்பனரல்லாத குழந்தைகளுக்கும் தனித்தனி இடத்தில் பிரித்து உணவு வழங்கினார். பார்ப்பனக் குழந்தை சமஸ்கிருத சுலோகம் பாடும். பார்ப்பனரல்லாத குழந்தை தேவாரம், திருவாசகம் தான் பாடும்.

இதே வ.வே.சு. அய்யர் இங்கிலாந்தில் இருந்த போது என்ன செய்தார்? டி.எஸ்.எஸ்.ராஜன் என்ற ஒருவர், இராஜாஜி அமைச்சரவையில் அமைச்சராக பணியாற்றியவர். இங்கு மருத்துவம் படித்துவிட்டு மேற்படிப்புக்காக இலண்டன் போகிறார். அங்கு தங்கியிருந்து சைவ உணவு சாப்பிட வேண்டும் என்றால் அதிக செலவாகும். அசைவ உணவு என்றால் குறைவான செலவு தான். மரக்கறி உணவு என்றால் தேடி கண்டுபிடிக்க வேண்டும் அதனால் அதிகம் செலவாகிறது. மிகவும் கஷ்டப்படுகிறார். அப்போது இதே வ.வே.சு.அய்யர் இலண்டன் வருகிறார். மூன்றாமாண்டு பாரிஸ்டர் படிப்புக்கு வருகிறார், அவரிடம் பிரச்சினையைக் கூறி ஆலோசனை கேட்கிறார். எப்படி சமாளிக்கிறீர்கள் என்னால் முடியவில்லை என்று சொல்கிறார். அவர் பேசாமல் நீங்கள் கறி சாப்பிடுங்கள் என்கிறார். அவர் அய்யய்யோ என்கிறார். நீ சாப்பிடு, இந்தியாவில் போய் அதையெல்லாம் வைத்துக் கொள்ளலாம் என்று கூறுகிறார். அதோடு நில்லாமல் நானும் மூன்றாண்டுகளாக அதைத்தான் செய்து வருகிறேன் என்று சொல் கிறார். நீயும் அதையே செய் என்று கூறினார். அதற்கு பிறகு சாப்பிட்டேன். மூன்றாண்டுகள் சாப்பிட்டு எனக்கு மாமிசம் மீது ஈர்ப்பு வரவில்லை என்று அவர் 'நினைவலைகள்' என்ற வாழ்க்கை வரலாற்று நூலில் எழுதி இருக்கிறார். அப்படி ஆலோசனை சொன்ன வ.வே.சு. அய்யர், குருகுலத்தில் பார்ப்பனரல்லாத மாணவர்கள் பக்கத்தில் அமர்ந்துகூட சாப்பிடக் கூடாது என்று சொல்கிறார். (தொடரும்)

### இதுதான் தமிழ்நாடு; இதுதான் பெரியார் மண்!

மத்திய பிரதேச மாநிலத்திலிருந்து ஆர்.எஸ்.எஸ். குடும்பத்தைச் சார்ந்த ஒரு பட்டதாரி பெண், தன்னை நரபலி தரப்போகிறார்கள் என தனது குடும்பத்தினரிடம் பயந்து பாதுகாப்பு கேட்டு தமிழ்நாடு வந்துள்ளார். மூத்த வழக்கறிஞர் எஸ்.துரைசாமி, அவரை உயர்நீதிமன்ற நீதிபதி சந்திரசேகர் முன்னிலையில் ஒப்படைத்து, நீதிபதி உரிய பாதுகாப்பு வழங்குமாறு அரசு வழக்கறிஞருக்கு உத்தரவிட்டுள்ளார். அரசு வழக்கறிஞரும் பாதுகாப்பை உறுதி செய்துள்ளார். தமிழ்நாடு தான் தன்னைப் பாதுகாக்கும் என்று தமிழ்நாடு வந்ததாக அந்தப் பெண் கூறி உள்ளார். ஆர்.எஸ்.எஸ் குடும்பம், சொந்த மகளை நரபலி தருகிறது; பெரியார் மண் அவரை காப்பாற்றுகிறது. இதுதான் தமிழ்நாடு; இதுதான் பெரியார் மண். சங்கிகளே என்ன சொல்லப் போகிறீர்கள்?

## விஞ்ஞானிகள் கடும் கண்டனம்: மருத்துவ சோதிட வகுப்பைத் தொடங்குகிறது மருத்துவக் கவுன்சில்

ஆயுர்வேத மருத்துவப் படிப்பில் 'மருத்துவ சோதிடம்' என்ற புதிய வகுப்பை இந்திய மருத்துவக் கட்டமைப்புக்கான தேசிய கவுன்சில் உருவாக்கியுள்ளது. இதற்கு 'அறிவியல் கழகம்; தடைகள் தகர்ப்பு' என்று விஞ்ஞானிகள் - அறிவியலாளர்களைக் கொண்ட அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வானத்திலுள்ள கிரகங்கள் மனித உடல்கள் மீதும் உணவியல் மீதும் தாக்கத்தை உருவாக்குகிறது என்பது அறிவியலுக்கு எதிரான மூடநம்பிக்கை. இந்த மூட நம்பிக்கைகளை அறிவியல் பாடத்தில் சேர்ப்பது கண்டனத்துக்குரியது என்று அந்த அமைப்பு அ றிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த வகுப்புக்கு இதுவரை 1000 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். மருத்துவ அறிவியல் பயிலும் மாணவர்களை மூடநம்பிக்கைகளில் ஆழ்த்தும் இந்த வகுப்பு, இந்திய கல்வி முறையை மதிப்பிழக்கச் செய்து நாட்டுக்கு கேடு விளைவிப்பதாகி விடும். இந்த கேலிக் கூத்து நாடகங்களை குடிமக்கள் வேடிக்கைப் பார்க்கக் கூடாது; எதிர்க்க வேண்டும் என்று அறிவியல் கழகம் தனது கண்டன அறிக்கையில் கூறியுள்ளது.

# நங்கவள்ளி ஒன்றியத்தில் பகுத்தறிவுப் பரப்புரை

திராவிடர் விடுதலைக் கழக சேலம் மாவட்டம்,நங்கவள்ளி ஒன்றியத்தின் சார்பில் 22.02.2023 புதன்கிழமை கிராமப்புற பகுத்தறிவு பிரச்சார தெருமுனை கூட்டங்கள் நடைபெற்றன

முதல் தெருமுனை கூட்டம் பக்க நாடு சந்தை அருகில் மாலை 5.00 மணிக்கு நங்கவள்ளி ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காவை இளவரசனின் மந்திரமா? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்வில் புதியவன், மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு, கழக தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். இப்பகுதியில் பெருமளவில் மக்கள் ஆர்வத்துடன் பிரச்சாரத்தை உற்று கவனித்ததோடு உண்டியல் வசூல் 840 ரூபாய் வழங்கி ஆதரவளித்தனர். முடிவில் சிவக்குமார் நன்றியுரையாற்றினார்.

இரண்டாவது நிகழ்வு ஆடையூர் குடியிருப்பு பகுதியில் 7.00 மணி அளவில் நடைபெற்றது. மிகச் சிறப்பாக நடைபெற்ற இந்த கிராமப்புற பகுத்தறிவு பிரச்சார தெருமுனை கூட்டத்திற்கு நங்கவள்ளி ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். இக் கூட்டத்தில் புதியவன் மற்றும் வழக்கறிஞர் வித்யாபதி ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். அதனைத் தொடர்ந்து மந்திரமா ? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்ச்சியை காவை.இளவரசன் மக்கள் மத்தியில் மிகச் சிறப்பாக செய்து காட்டினார். நிறைவாக மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு மற்றும் கழக தலைமைக்குழு உறுப்பினர் சக்திவேல் கருத்துரையாற்றினார்

இந்தப் பகுதியில் இளைஞர்களும், மாணவர்களும்,பெண்களும் திரளாக வந்திருந்து கிராமப்புற பகுத்தறிவு பிரச்சாரத்திற்கு ஆதரவளித்து சிறப்பித்தார்கள். முடிவில் உமா சங்கர் நன்றி கூறினார்.

இந்தத் தெரு முனை கூட்டத்தில் ஆர்.எஸ். பகுதியைச் சார்ந்த நாகராஜ், நங்கவள்ளி தோழர்கள் அருள் குமார், குமார், சிவக் குமார், வனவாசி நகரத் தலைவர் செந்தில் குமார் மற்றும் அறிவழகன், வனவாசி நகரப் பொறுப்பாளர் பன்னீர் செல்வம், வனவாசி பொறுப்பாளர் கதிர்வேல், நகரச் செயலார் உமாசங்கர், வெள்ளரி வெள்ளி பகுதியைச் சார்ந்த விஜய் பாபு, சங்ககிரி சார்ந்த செந்தில் குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பெரியாரின் கருத்துக்கள் அடங்கிய 500 துண்டறிக்கைகள் மக்களிடம் கொடுக்கப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 2nd March 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN